# பவானியின் சிறுகதைகளில் இடம்பெறும் சமூகப் பிரச்சினைகள்

*நாகரத்னம் சுதர்ஷினி*
*விரிவுரையாளர், மொழிகள் துறை*
*சமூகவிஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்*
*இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்*
*பெலிஹுல்லோயா*

படைப்பிலக்கியங்கள் மனித சமுதாயத்தில் நடந்தேறிய நிகழ்வுகளின் நிழல்களாக செயற்படக் கூடியவை. இலக்கியங்கள் காலத்தைக் காட்டும் கண்ணாடிகள் என்ற அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் வாழ்ந்த மக்களின் பண்பாடு, கலாசாரம், நிகழ்வுகள், தனிநபர்கள் என அனைத்தையும் பிரதிபலிக்கின்றன.

“வாழ்வே இலக்கியத்தின் அடிப்படை, படைப்புக்கு வாழ்வியல் அனுபவமே அடிப்படை, இந்த அனுபவம் கரு, கதைப்பொருள், பாடுபொருள், நோக்கப்பொருள், நுவல் பொருள் என்ற பல்வேறு பெயர்களால் குறிக்கப்படும்”.[1]

இதனூடாக கலைஞனொருவன் புறவுலகில் தான் கண்ட உண்மைகளின் சாராம்சத்தை இலக்கியமாகப் படைக்கிறான் என்பதை அறியலாம்.

கவிதை, புதினம், நாடகம் போன்ற படைப்பிலக்கியங்களுள் சிறப்பானதாகக் கருதப்படும் சிறுகதை எளிமையான படைப்பாக இருத்தல் வேண்டும். மக்கள் இலக்கியமாகப் பரிணமித்துவிட்ட இக்கலை பத்தொன்பதாம் நூற்றாண்டுகளிலேயே மிகுதியாக வளர்ச்சியுற்றது எனலாம். இச்சிறுகதை உலகிலே பல சிறுகதையாளர்கள் உலவித்திரிகின்ற வேளையில் பவானிசிவகுமாரன் தனக்கென்றதொரு தனியிடத்தைப் பெற்றுள்ளார் என்று கூறலாம். ஆசிரியரின் மரம் வைத்தவன், தேடலே வாழ்க்கையாய் ஆகிய படைப்புகளைத் தொடர்ந்து வந்த மூன்றாவது படைப்பாகிய ‘நிஜங்களின் தரிசனம்’ சமுதாயத்திலுள்ள யதார்த்தங்களை அல்லது உண்மைகளை பிரதிபலிக்குமொரு படைப்பாகக் காணப்படுகிறது. இப்படைப்பு பற்றி சபா ஜெயராசா தனது உரையில் வருமாறு கூறுகிறார்,

“சமகாலத்தைய மத்திய தரத்தினரின் வாழ்வு இடுக்கினுள் நிகழும் பல்கோணச் சிதறல்களின் தனித்தனி பரவல்கள் ஒவ்வொரு சிறுகதைக்குமுரிய தெரிவாகவும் கருவாகவும் அமைகின்றன. அவற்றின் இயல்பு முக்கியத்துவத்தை அடியொற்றி நெட்டாங்கு மற்றும் அகலாங்கு விபரணங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சமூக கட்டுமைகள், திருமண அழுத்தங்கள், பண்பாட்டு முகமூடிகளின் இடைவிலகல்கள், தனிமனித ஆளுமை மீதான திணிப்புகள், புதிய வடிவினை எடுக்கும் பழைய நினைவுப் பேழைகள், கரைந்து கசிந்து தளர்வுற்று நிற்கும் நெடுவழி மரபுகள், ஆவல்களின் மாற்று இருப்பு, உளக்கோலங்களின் உருமாற்றம், ஏக்கங்களின் உலா வருகை, யுத்தம் தந்த துயரச்சுரங்கம், முதலாய பல்வேறு பொருட்செறிவுகள் கதைகளிலே உள்ளடக்கப்பட்டுள்ளன.” [2]

இதனூடாக ‘நிஜங்களின் தரிசனம்’ சமூகத்தில் காணப்படும் பிரச்சினைகளின் சுருக்கமாகக் காணப்படுகிறது என்பதை உணரலாம். யதார்த்தமில்லாத இலக்கியங்கள் காலவோட்டத்தில் காணாமல் போய்விடும் என்றுணர்ந்த பவானி வாழ்வின் பல்வேறுபட்ட அம்சங்களையும் சமகாலப் பிரச்சினைகளையும் தான் வாழும் சூழலில் நிகழும் நிஜங்களுக்கும் உயிர் கொடுத்து தனது சிறுகதைகளில் உருவம் கொடுத்துள்ளார்.

இலங்கையில் தொடர்ச்சியாக இடம்பெற்றுக் கொண்டிருந்த யுத்தத்தின் இறுதிக் கட்டமாகிய 2011ஆம் ஆண்டே இப்பனுவல் உருவாகியது. இதனடிப்படையில் அச்சூழலின் பிரதிபலிப்பாகவே இது காணப்படுகிறது. போர்க்காலக் கொடுமைகள், இடப்பெயர்வு வாழ்க்கை, போரடக்கப்பட்ட மண்ணிற்கான மக்களின் பின்வருகை, போர்ச்சூழலில் முதியோர்கள் முகங்கொடுத்த பிரச்சினைகள், பெற்றோரால் கைவிடப்பட்ட பிள்ளைகளின் உணர்வுகள் எனப் பல்வேறு கோணங்களில் போர்ச்சூழல் விபரிக்கப்படுகிறது. இவை தவிர பெண்களின் வாழ்வியற் பிரச்சினைகளைப் பல்வேறு கோணங்களில்

ஆராய்கிறார். உறவுகள் அல்லது உறவினர்கள் பற்றிய கருப்பொருட்களைக் கதைகளின் கருவாக்கியுள்ளார். தற்கால இளைஞர் யுவதிகளிடையே காணப்படும் அவசரக்காதல் பாரியதொரு விளைவினை ஏற்படுத்தவல்ல பிரச்சினையாகும். இப்பிரச்சினை உட்பட பல்வேறு சமூகப்பிரச்சினைகளை தனது சிறுகதைகளின் கருவாகக் கொண்டு சிறுகதைகளைப் படைத்துள்ளார்.

**போர்க்காலக் கொடுமைகள்**

இன முரண்பாடுகளின் விளைவால் ஈழத்திலே நடந்தேறிய போரினால் அச்சமூகத்தவர்கள் முகங்கொடுத்த இன்னல்கள் எண்ணிலடங்காதவை. இக்கொடுமைகளை நம் கண்முன்னே கொண்டுவரும் வகையில் உருவாக்கப்பட்ட சிறுகதையாக 'மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்' என்ற சிறுகதை காணப்படுகிறது.

இரண்டு பெண் பிள்ளைகளும் ஓர் ஆண் பிள்ளையென கணவனுடன் வாழ்ந்தவள் யோகராணி செல் விழுந்ததில் கணவன் இறந்துவிட ஆதவன், ஆனந்தி இருவரும் காயமுற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட தாயும் இளைய மகளும் கேம்பில் தஞ்சம். பின்னர் உடமைகளும் உறவுகளும் அற்றவளாக இருந்தவளிடம் ஒரு காலை இழந்த நிலையில் ஆனந்தி வந்து சேர்கிறாள். இச்சுருக்கம் போரினால் மக்கள் அனுபவித்த இன்னல்களை நம் கண்முன் கொணர்ந்து சேர்க்கிறது.

இச்சூழலில் நிவாரணப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுதல் இன்றியமையாததாகும். இதற்காக என்.ஜி.ஓக்கள் பல துணை செய்தன. இதனை,

"பாய், நுளம்புவலை, இரண்டு அரிக்கன் லாம்புகள், பாத்திரங்கள், ஆளுக்கு ஒருசோடி மாற்றுடை, வீடு கட்டத் தடிகள், தகரங்கள், கத்தி, மண்வெட்டி, என அலுவலர்கள் ஒவ்வொன்றாய் சரி பார்த்து கையொப்பம் வாங்க நான் பங்கீட்டு அட்டைகளை-ரேசன் கார்ட் வழங்கிக் கொண்டிருந்தேன்.

இங்கே பங்கீட்டு அட்டைகளைப் பெற்றதும் சிறிது தள்ளி மேசை போட்டு அமர்ந்திருந்த என்.ஜி.ஓ- அரசசார்பற்ற நிறுவன அதிகாரிகளிடம் வரிசை நகர்ந்தது அங்கே பெயர்களைப் பதிந்தால் ஓரிரு வாரங்களில் குடும்பமொன்றிற்கு இருபத்தையாயிரம் ரூபாய்கள் கிடைக்கும்".[3] என்ற கூற்றினூடாக உணரலாம்.

"வீடு தரைமட்டம், மரங்களெல்லாம் முடியைப் போருக்குக் காணிக்கையாக்கியிருந்தன". [4]

என்ற கூற்றினூடாக களம் பற்றி உணரலாம். இவ்வாறாக போர்க்காலக் கொடுமைகளைக் கருவாகக் கொண்டமைந்த இக்கதையிலிருந்து வெளிப்படும் கருத்தினை நோக்கும் போது யோகராணி பிறரை ஏமாற்றாது, கிடைக்கும் நிவாரணப் பொருட்களை மட்டுமே கொண்டு வாழ்க்கை நடத்தாது உழைக்க வேண்டும் என்ற துடிப்புடன் பல வேலைகளைச் செய்கிறாள். எனினும் ஓரளவு சிறப்பாக வாழும் பச்சைச் சேலை கட்டிய பெண் ஏமாற்றி உதவிகளைப் பெறத் துடிக்கிறாள். இச்சிறுகதையில் யோகராணியை மையப்படுத்தி இப்படித்தான் வாழவேண்டும் என்ற கருத்து மக்களிடம் பரப்பப்படுகின்றது. இலவசமாகத் தரப்படுபவற்றை அதிகமாகப் பெறவேண்டுமெனத் துடிக்கும் மக்கள் அதிகமாகக் காணப்படுதல் சமூகத்தில் நிலவும் பாரிய பிரச்சினையாகும். இதனையும் இக்கதை பிரதிபலிக்கிறது.

**இடப்பெயர்வு வாழ்க்கையும், முதியவர்களின் சோகமும்**

போரின் கொடூரத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள மக்கள் சொந்த நாட்டை விட்டு வேறு நாடுகளை நோக்கி இடம்பெயர்ந்தனர் இது இடம்பெயர்ந்தவர்களை அநாதைகளாக்கியது மட்டுமன்றி சொந்த நாட்டிலிருந்தவர்களையும் அநாதைகளாக்கியது. இரு தரப்பினரையும் துன்பத்துக்குள்ளாக்கிய இடப்பெயர்வு எனுந் துன்பத்தினைப் பிரதிபலிக்கும் வகையில் 'குடை பிடிக்கும் நினைவுகள்' எனும் சிறுகதை காணப்படுகிறது.

இளையவர்களெல்லாம் இடம் பெயர்ந்துவிட தன்னையொத்த பழசுகளோடு தன் வாழ்க்கையினை நகர்த்திச் செல்கிறார் இரத்தினசிங்கம். பெற்றோர்களை மறந்து வெளிநாடு சென்ற தன் மகனின் அஸ்தியோடு பேரன் நாடு திரும்ப கவலை மறந்து அவனோடு இணைந்து வேலை செய்கிறார். அவன் தன்னோடு அவரை அழைக்க தாய்நாட்டை விட்டுவர மறுக்கிறார். என்றாலும் மனித நடமாட்டம் குறைந்த அந்தப் பிரதேச வாழ்க்கை அம்முதியவர்களுக்கு ஏற்படுத்திய உணர்வினை,

“ஓசைகள் அடங்கி விட்டன. பல தசாப்தங்கள் ஒன்றியிருந்த ஓசைகள் அடங்கிப் போனது உறவுகளைப் பிரிந்ததை விட வேதனையளித்தது இங்கிருக்கும் வயோதிபர்களுக்கு”. [5]

என்ற கூற்றினூடாக உணரலாம். ‘மாறுதே நம் வானிலை’ என்ற சிறுகதையில்,

“ஊர் விட்டு ஊர் வந்து அநாதையாய் இடம் புதிது ஆட்களையும் தெரியாது, தெரிந்து தான் என்ன பிரயோசனம், ஒருவரும் இங்கில்லை பழகுவதற்கு’’. [6]

என்ற கூற்று இடப்பெயர்வினால் ஏற்பட்ட தனிமையின் கொடுமையினை விளக்குகிறது. போரின் பிடியிலிருந்து தப்பிக் கொள்ள மகள், மருமகனுடன் வேறிடம் நோக்கிச் செல்ல சூழ்நிலையால் கிழவனும், கிழவியும் தனிமையில் விடப்படுகின்றனர். அழைத்துப் போக வருவதாகக் கூறிச் சென்ற மகனைக் காணவில்லை. கைவசமிருந்த தண்ணீரும், பிஸ்கட்டுகளும் தீர்ந்து விடவே செய்வதறியாது பாரிசவாதம் வந்த கணவனையும் வைத்துக் கொண்டு வேதனையுறுகிறாள். “பத்து நாட்களுக்கு கிழவி மங்களம் இப்படித் தானும் தன் கணவனும் தனித்து விடப்படுவோமென்று நினைக்கவேயில்லை’’ [7] என்ற கூற்று அம்முதியவளின் வேதனையை வெளிப்படுத்துவது மட்டுமின்றி முதியவர்களின் நிலைமையை நாம் உணரத் துணைசெய்கிறது. தெய்வாதினமாக அந்தத் திசை நோக்கி வந்த சிலர் கைவிடப்பட்ட அந்த முதியோரை அழைத்துச் செல்கிறார்கள்.

“ட்ரக்டர் ஒன்று வந்து கொண்டிருந்தது. மட் காட்டில், ட்ரைவருக்குப் பக்கத்தில் நின்றவாறு ஒருவர் வந்து கொண்டிருந்தார். அருகே வர ட்ரக்டர் பெட்டியில் பல கிழங்களின் முகங்கள்.’’ [8]

என்ற கூற்று போரினால் எண்ணற்ற முதியோர்கள் பிள்ளைகளால் கைவிடப்பட்டுள்ளார்கள் என்பதை உணர்த்துகிறது.

‘நிஜங்களின் தரிசனம்’ என்ற சிறுகதையில் வெளிநாட்டிலிருந்து வந்த மனைவியின் உறவினர்களைத் தங்கவைப்பதற்கெனப் பெற்ற தாயினை முதியோர் இல்லத்துக்கு அனுப்பி வைக்கிறான் மோகன். பின்னர் இடையிடையே வந்து தாயைப் பார்க்கிறான். இவ்வாறு பெற்றோரை முதியோர் இல்லத்திலே சேர்ப்பது இக்காலத்திலே நாகரிகமாகிவிட்ட நிலையிலே இச்சமூகப் பிரச்சினையைக் கருவாகக் கொண்டு மேற்கூறிய கதையினை உருவாக்கியுள்ளார்.

இயந்திரமயமான இவ்வுலகிலே பெற்றோர்களைச் சுமையாக எண்ணும் பிள்ளைகளும், போர்ச்சூழலிலே பெற்றோரைக் கைவிட்டுச் சென்ற பிள்ளைகளும் செய்த தவறுகள் அப்பெற்றோரைத் துன்புறுத்தும் விதம்பற்றிக் கற்பிக்கும் இச்சிறுகதைகள் பிள்ளைகளால் கைவிடப்பட்ட பெற்றோர்களின் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன.

**பெற்றோரைப் பிரிந்த பிள்ளைகள்**

போர்க்காலத்தில் தங்களது பிள்ளைகளைப் பாதுகாக்கவென பெற்றோர் தங்களது பிள்ளைகளை உறவினர்கள் இல்லங்களிலும் பாதுகாப்பான இடங்களிலும் தங்கச்செய்து பாதுகாத்தனர். இந்தச் சூழ்நிலையிலே எத்தனையே பிள்ளைகள் போரினால் பெற்றோர் இறந்தனரா? அல்லது வேறிடம் நோக்கிச் சென்றனரா? என்பதறியாது உறவினர்களால் அநாதைகளாக்கப்பட்ட நிகழ்வுகள் பலவற்றை இச்சமுதாயத்தில் கண்டுள்ளோம். இதனைப் போலவே பெற்றோருடன் இருந்த பிள்ளைகள் போரின் போது பெற்றோரை விட்டுப்பிரிந்து வேறு நபர்களோடு வாழும் சூழ்நிலைகளும் போர்க்காலத்திலேயேற்பட்டது. இத்தகையதோர் கருவினைக் கொண்டதாகவே ‘என்னுள்ளே ஏதோ’ என்ற சிறுகதை காணப்படுகிறது.

போரின் கோரத்தினால் பெற்றோரை விட்டுப் பிரிந்த மோகனாங்கி வேறு இருவரிடம் வளர்கிறாள். எனினும் அவளின் பழைய நினைவுகள் கனவுகளாய் அவளைத் தொடர சந்தர்ப்பவசத்தால் அவளின் பிறந்த ஊருக்குச் செல்கிறாள். அங்கே அவளின் குடும்பத்தைச் சந்திக்கிறாள் என்னும் துன்பத்திற்கு மத்தியில் தன் உணர்வுகளை வெளிப்படுத்தாது வளர்ப்புத் தாயுடனும், தந்தையுடனும் ஊர் திரும்புகிறாள்.

“அப்பா என்னைத் தெரியேல்லயா? நான் மோகனா. எனக்கு அழுகை வருகிறது. என்னைத் தூக்கிக் கோயிலுக்குக் கொண்டு செல்வது ஞாபகம் வருகிறது. பாவம்… வயது போய், மெலிந்து…. தலையில் வழுக்கை விழுந்து……’’ [9]

“அம்மா! அண்டைக்கு உங்கட கையால சாப்பிட்ட ருசி இன்னும் நாக்கில நிக்கிது”. [10]

போன்ற கூற்றுக்கள் பெற்றோரைக் கண்ட அப்பிள்ளையின் மனதில் ஏற்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன.

**உறவுகள்**

சமுதாயத்தில் காணப்படுகின்ற ஒரு சிறிய விடயத்தினையும் கருவாகக் கொண்டு கதை படைக்கும் ஆசிரியர் உறவுகள் அல்லது சொந்தம் எனும் விடயத்தினையும் விட்டுவைக்கவில்லை. சுயநலமற்று உண்மையான அன்போடு பழகும் உறவுகள் ஒருபுறமிருக்க, தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், பயன்களைப் பெற்றுக் கொள்ளவும் போலியாக உருவாகும் உறவுகள் பிறிதொரு புறமிருக்கிறார்கள். உறவுகளால் நன்மையடைந்தோரும் உளர், உறவுகளால் வாழ்க்கையை இழந்தோரும் உளர். ஆதலால் மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி, சமூகத்திலும் சரி உறவுகள் இன்றியமையாதனவாகின்றன. இதனடிப்படையில் உறவுகளின் இருமுகங்களினையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ‘சொந்தமில்லை சோகமில்லை’, ‘கோடைகாலத் தூறல்கள்’ ஆகிய இரண்டு கதைகளும் காணப்படுகின்றன.

‘சொந்தமில்லை சோகமில்லை’ எனும் சிறுகதையில் தற்செயலாய் லலிதா மாமியை சந்திக்கிறாள் சுகந்தி. சுதாகருக்குத் திருமணம் எனக்கூறி திருமணப் பத்திரிகையினை அவளிடம் கொடுக்கிறாள். பின்னர் விருப்பமின்றித் திருமணமண்டபத்திற்குச் செல்கிறாள்.

“பார்க்க விரும்பாத நினைவில் மறைந்து போன பல முகங்களைப் பார்க்க வேண்டியிருந்தது. அருகில் வந்து சிரிக்கும் பல முகங்களில் குள்ளநரிகள் தெரிந்தன.” [11]

என்ற கூற்று உறவுகள் மீது அவள் கொண்ட வெறுப்பினை வெளிப்படுத்த, மேலும்

“கதை சொல்லிக் கொடுத்த பழைய தலைமுறை ஒன்று போய்ச் சேர்ந்து விட்டது. இன்றைய தலைமுறை சொல்லிக் கொண்டிருக்கிறது நாளைய தலைமுறை கேட்டுக் கொண்டிருக்கிறது. இது தொடரும். இவர்கள் மற்றவர் பெயரைக் கெடுத்துச் சாதித்தது என்ன? எனக்குத் தெரியவில்லை.” [12]

என்ற கூற்று உறவின் பண்புகளை வெளிப்படுத்துகின்றது.

“உதவி பெற்றுவிட்டு மறந்து போன உறவுகள், புறக்கணித்த உறவுகள், தாம் தாழ்ந்த போது புறம்பேசிக் களித்த உறவுகள்” [13]

என உறவுகளை வகைப்படுத்திக் அவள் யோசிப்பது உறவுகள் பலவகை என்பதை உணர்த்தியது மட்டுமன்றி அவள் உறவுகளை வெறுத்தமைக்கான காரணங்களையும் வெளிப்படுத்துகிறது.

‘கோடைகாலத் தூறல்கள்’ என்ற சிறுகதையில் வரும் தயாளினி காலை முதல் இரவு வரை ஓயாமல் வேலை செய்து கொண்டிருக்கிறாள். இந்நிலையில் கணவனின் ஒன்றுவிட்ட சகோதரியான ஆனந்தி வெளிநாடு போவதற்காக இவளின் வீட்டிற்கு வருகிறாள். வீசா வரும் வரை இங்கு தங்குவதற்கென வந்த அவளின் பிள்ளைகள் செய்கின்ற அட்டகாசங்கள் கோபம் கொள்ளச் செய்வதிலும் தயாளினியின் வேலையில் முக்கால்வாசியை ஆனந்தி பொறுப்பேற்கிறாள். டேகெயாரில் விடப்பட்ட அவளின் குழந்தை வீட்டில் வளர்கிறது. எட்டுமாதங்கள் வரை தயாளினிக்குத் துணையிருந்த ஆனந்தி வீசா வந்துவிடவே வெளிநாட்டிற்குச் செல்கிறாள். இயந்திரமாய் கோடைகாலத்தில் வாழ்ந்த அவளின் வாழ்க்கையில் தூறலாய் வந்துவிட்டுச் செல்கிறாள் ஆனந்தி. இச்சிறுகதையில் உறவுகள் துணையாகவிருக்கின்ற விதம் தொடர்பில் எடுத்துரைக்கப்படுகிறது.
குழந்தைகள் அட்டகாசம் செய்வதைப் பார்த்து,

“பிள்ளைகளாம் பிள்ளைகள், சரியான குரங்குகள், தாயும் பிள்ளைகளும் சரியான பட்டிக் காடுகள்…”. [14]

எனத் திட்டுவதும்,

“மச்சாள் விசா வந்திட்டுது..”. [15]

என்ற போது இருவரும் தங்களையறியாமல் அழுததும், இறுதியில் விடை பெற்றுச் செல்லும் உரையாடலும் உறவுகளின் அவசியத்தை எடுத்துரைக்கின்றன.

இவ்வாறாக உறவுகள் எனும் ஒரு விடயத்தினைக் கொண்டு இருபுறமும் புலப்படும் வகையில் 'சொந்தமில்லை சோகமில்லை', 'கோடைகாலத் தூறல்கள்' எனும் இருகதைகளையும் படைத்துள்ளார்.

**பெண்களின் திருமணப் பிரச்சினை**

"வீட்டினுள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்." என்ற பாரதியின் கூற்றிற்கிணங்க இன்றைய காலகட்டங்களில் பெண்களின் கல்வி, தொழில் என்பன சிறப்பாக அமைந்திருக்கின்றன. ஆசிரியரின் கதைகளிலும் பெண்கள் துணிச்சலானவர்களாகவும் தொழில் செய்பவர்களாகவுமே சித்திரிக்கப்பட்டுள்ளனர். 'கோடைகாலத் தூறலில்' தயாளினி வேலைக்குச் செல்பவளாகவும், 'மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்' என்ற சிறுகதையில் கணவனை இழந்துவிட்ட பின்பு வீட்டினுள்ளே முடங்கிக் கிடக்காது உழைக்க வேண்டுமென எண்ணித் துடிக்கும் யோகராணியும் மிகச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகத் திகழ்கின்றனர்.

பெண்கள் ஆணுக்கு நிகரான உரிமைகளை கணிசமான அளவிற்கு பெற்றுவிட்ட போதிலும் பெண்கள் தொடர்பான திருமணப் பிரச்சினைகள் இன்றும் சமுதாயத்தில் காணப்படுகின்ற பிரச்சினையாகும்.

'சொப்பனத் திருமணம்' என்ற முதல் சிறுகதையிலேயே ஆசிரியர் இச்சமுதாயப் பிரச்சினை கருவாகக் கொண்டே கதையை நகர்த்துகிறார். ஆசிரியையாகத் தொழில் பார்க்கும் இந்துமதிக்கு 32 வயதாகியும் திருமணம் நடைபெறவில்லை. நண்பியின் அறிவுரையைக் கேட்டு காண்டம் பார்க்கச் செல்கிறாள். ராகு சர்ப்ப தோஷமாம் என்று பரிகாரங்களைக் கேட்டுக் கொண்டு எண்ணங்களால் என்ன செய்வதென சிந்தித்துக் கொண்டே பஸ்ஸிலிருந்து இறங்கி நண்பியின் வீட்டுக்குச் செல்ல கடக்க முற்படும் போது ஒரு வழிப் போக்குவரத்தாக மாற்றப்பட்டிருந்த வீதியால் வந்த வாகனம் தூக்கியெறிந்தது இந்துமதியை எனக் கதை நிறைவடைகிறது.

இவ்வாறாக ஒரு பெண்ணின் திருமணம் சொப்பனமாகி அது நிறைவடையாது போகிறது. இன்றும் எமது சமுதாயத்திலே முதிர்கன்னிகள் பலர் உலவுகின்ற நிலையிலே இத்தகையதோர் கருப்பொருளினைக் கொண்டு இக்கதை உருவாக்கப் பெற்றது சாலவும் சிறந்தது.

'சிறகுகள் முளைக்குதே' எனும் சிறுகதையிலே வரதட்சணை எனும் சமுதாயப் பிரச்சினை பற்றிப் பேசப்பட்டாலும் வித்தியாசமானதோர் கண்ணோட்டத்திலே இக்கதைக் கருவினைக் கையாண்டுள்ளார். லதாங்கியின் தந்தை ஐந்து புதல்விகளைப் பெற்று இரண்டு புதல்விகளின் திருமணத்தினை நிறைவு செய்து மூன்றாவது மகளின் திருமணத்தினையும் வரதட்சணையோடு நிறைவேற்றுகிறார். தந்தையின் துயர் கண்ட லதாங்கி கணவனை வெறுத்து அவனோடு பேசுவதைக் குறைத்து விலகி நிற்கிறாள். இச்சூழ்நிலையில் வரதட்சணை வாங்கியது சுரேன் இல்லை அவனது அம்மாவும் அக்காவும் தான் என்றும், அவன் வங்கியில் பணம் வைப்பிலிட்டுள்ளான் என்பதையும் அறிந்து அவன் மீது தவறில்லை என்றறிந்து அன்பு கொள்கிறாள். இவ்வாறான கணவன் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை ஆதலால் ஆசிரியர் வரதட்சணை என்னும் மையக்கருத்தினை எதிர்மறையான பொருளில் கையாண்டு மிகச் சிறந்த படிப்பினையைப் பெற்றுத் தருகிறார்

'மீட்சியா? என்ன விலை?' என்ற சிறுகதையில் அருந்தவராஜனுக்கு கிடைத்த மருமகன்களோ சுரேந்தருக்கு எதிர்மறையானவர்கள்.

"மூத்த மருமகன் மனைவியையும் கைக்குழந்தையையும் தருவதாகச் சொன்ன சீதனக்காசை வாங்கி வரும்படி வீட்டில் கொண்டுவந்து விட்டானாம்." [16]

என்ற கூற்று இதனை உறுதிப்படுத்துகிறது. இவ்வாறாக ஆசிரியர் சமூகத்திலுள்ள பிரச்சினைகளைக் கருப்பொருட்களாக கையாளும் பொழுது சார்பான கதாபாத்திரங்களை மட்டுமின்றி நேர்மாறான கதாபாத்திரங்களையும் கையாண்டு அவர்களின் செயல்களின் மடமைகளைச் சுட்டிக்காட்டி, அதன் விளைவுகளையும் எடுத்துகாட்டுகிறார்.

**நாட்டுப் பற்றினைக் கருவாகக் கொண்ட கதைகள்**

பேராசையும் தீவிரவாதமும் நிறைந்து காணப்படும் இவ்வுலகிலே தீவிரவாதச் செயல்களும், கடத்தல்களும் பெருகிவிட்டன. இந்நிலையில் இவற்றினைக் கருப்பொருளாகக் கொண்டு கதைகளைப் படைத்து அதனூடாகப் படிப்பினையைப் பெற்றத் தருவது சிறப்பாகும்.

ஆசிரியரின் ‘கப்பல் விட்டார் முன்னவர்கள்’ என்ற சிறுகதை மேற்கூறப்பட்ட சமுதாயப்பிரச்சினைகளின் பிரதிபலிப்பாகவே காணப்படுகிறது. கதாநாயகன் ‘கலிஸ்ரோ’ தேசப்பற்றுடையவனாகவும், கொஸ்மி எனும் பாத்திரம் துரோகியாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளனர். தேசத்திற்காகப் போராடிய,

“கலிஸ்ரோ? வெறும் நடைபிணம். ஒரு காலில்லை. வயிற்றில் குண்டு பாய்ந்ததில் நிமிர்ந்து நடக்க முடியாது. அதனால்தான் இன்று உயிரோடு இருக்கிறான். மருத்துவனையில் ஒரு வருடகாலம். அவன் சிகிச்சை பெற்று வெளியே வந்தபோது போர் ஓய்ந்து விசாரணைகள் முற்றுப்பெற்றிருந்தன. இயக்கம் மறக்கடிக்கப்பட்டிருந்தது. அவனால் மறக்கமுடியவில்லை.” [17]

என அவனின் தேசப்பற்று வெளிப்படுத்தப்படுகிறது.

தேசத்துரோகியான கொஸ்மி பணம் சேர்க்கவென பல துரோகங்களைச் செய்தாலும் இன்று மத்திய அரசின் முக்கியபுள்ளி என அவன் பற்றிக் கூறப்படுகிறது. அக்காவால் உதவாக்கரை எனப்பட்ட கலிஸ்ரோ தன் நாட்டிற்கு துரோகம் செய்த கொஸ்மியைக் கொல்வதற்கென துணிந்து தன்னுயிரை இழந்து அவனைக் கொன்று துரோகியை அழிக்கிறான்.

‘மீட்சியா? என்ன விலை?’ எனும் சிறுகதையும் இத்தகையதோர் கருப்பொருளினைக் கொண்டதாகவே காணப்படுகிறது. அருந்தவராஜன் நேர்மையான அரசாங்க அதிகாரியாகக் காணப்படுகிறார்.

“நல்ல மனிதர். அதனால் சம்பாதிக்க தெரியவில்லை.” [18]

என்ற கூற்று இதனை உறுதி செய்கிறது. இத்தகையதோர் நேர்மையான அதிகாரியின் சாரதியாக இருக்கும் தேவநேசன் பணம் பெற வேண்டும், தங்கையைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் கிளைமோரினைக் கடத்தி மறைத்து வைத்து சட்டவிரோத செயலில் ஈடுபடுகிறான். இறுதியில் பொலிசாரினால் கைது செய்யப்படுவதுடன், அருந்தவராஜனும் விசாரணைக்குட்படுத்தப்படுகிறார். தவறிழைத்த தேவநேசன் தண்டனை பெறவதினூடாக தேசத்துரோகம் என்பது தவறெனப் புலப்படுத்தப்படுகிறது. தீயவனின் நட்பு அவன் செய்யும் வினைகளின் விளைவுகளில் எம்மையும் பங்குதாரராக மாற்றும் என்ற படிப்பினையும் வெளிப்படுத்தப்படுகிறது.

**மனிதம் போற்றும் கதைகள்**

மனிதம் அதாவது மனிதநேயம் எனப்படும் மனிதபண்பு இன்றைய அவசர உலகத்திலே காணாமல் போய்விட்டது. தன்னைப் பற்றிச் சிந்திக்கவே நேரம் குறைவாக இருக்கும் சூழ்நிலையில் பிறர் பற்றி சிந்திக்க நேரம் கிட்டுவதில்லை. ஆதலால் மாறிப்போன மனிதத்தினைக் கருவாகக் கொண்டு கதைகளைப் படைப்பது பயனுடையதாகும்.

‘நிழல் கொஞ்சம் தா’ எனும் சிறுகதையில் தன்னுடைய மகன், மருமகளுடன் வசித்துவரும் தாய் தனது சகோதரியின் மகளுக்கு தாலிக் கொடியினையும், ஒரு, சோடிக் காப்பினையும் பரிசாகக் கொடுத்துவிடுகிறார். விடயத்தினைத் தெரிந்து கொண்ட மகனும், மருமகளும் பேசுவதை நிறுத்தி விடுகின்ற நிலையில் தன்னிடம் கதை கேட்டு வருகின்ற பேரப்பிள்ளைகளுக்கு மகாபாரதத்தின் ஒரு பகுதியினைக் கூறி “உன்னைப் போல் பிறரையும் நேசி” [19] என்ற படிப்பினையைக் கற்றுத் தருகிறார். இதனைக் கற்ற பேரன்,

“அப்பம்மா நீங்க அப்பாவுக்கு உன்னைப்போல் பிறரையும் நேசி எண்டு கதை சொல்லேல்லயா? டோன்ட் வொரி, நான் வளர்ந்து உங்களுக்கு நிறைய பிக் செய்ன்ஸ், பாங்கில்ஸ் வாங்கித் தாரன்”.[20]

என்று கூறுகிறான். இது மயூரனை மட்டுமின்றி இன்னும் பலரையும் திருந்தச் செய்கிறது.

இச்சிறுகதையில் சுகிர்தாவிடம் அனைத்தையும் கொடுக்கும் தன்னலமற்ற பாட்டியின் செயல்களும் அறிவுரைகளும் மனிதநேயம் பற்றி எடுத்துரைக்கிறது. இச்சமூகத்தில் மனிதநேயம் கொண்டவர்கள் மட்டும் வாழ்வதில்லை என்பதையுணர்ந்த ஆசிரியர் ‘நம்மவர்கள்’ எனும் சிறுகதையினூடாக அதனைப் புலப்படுத்துகிறார். முச்சக்கரவண்டி மோதியதால் நினைவிழந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட தன் மகனைக் கொழும்புக்குக் கொண்டு செல்ல கிளியரன்ஸ் சான்றிதழ் கேட்டுவரும் நந்தகுமாரின் வேதனையைபுரிந்து கொள்ளாத அதிகாரிகள் அவனை அலட்சியப்படுத்துகின்றனர். இத்தகைய மனிதர்களும் உலகில் இருக்கத்தான் செய்கிறார்கள். பின்னர்

ஏ.ஓ விசாரித்து அவரின் உதவியோடு கொழும்புக்குச் செல்கிறான். அங்கும் சில நல்லவர்கள் டொக்டர் சிவகுமார் போன்றவர்கள் துணைநிற்க மகன் உயிர்பிழைக்கிறான். தகவலை மனைவியிடம் கூறுவதற்குக் கைப்பேசியைத் தேடினால் காணவில்லை. மனிதம் மரணித்த பூமியில் இத்தகையதோர் கருப்பொருளினைக் கொண்டு உருவாக்கப் பெற்ற இச்சிறுகதை வாசகன் மனதில் சிறு சிந்தனை அதிர்வை ஏற்படுத்தி அதனூடாக ஒரு மாற்றத்தினை ஏற்படுத்தி இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இலக்கியவாதிகள் இலக்கியங்களை இயற்ற சமுதாயத்தில் கண்டவை, சொந்த வாழ்வின் அனுபவங்கள் ஆகிய இரண்டு அடிப்படைகளே காணப்படுகின்றன. பவானியின் படைப்புகளை ஆராயும் போது அவர் இவ்விரண்டு அடிப்படைகளையும் கொண்டு இலக்கியம் படைப்பது மட்டுமின்றி, வடமாகாணத்தைப் படைப்புக்களமாகக் கொண்டுள்ளார். இம்மக்களின் நம்பிக்கைகள், பண்பாடு, சம்பிரதாயங்கள் போன்றவற்றினை வெளிப்படுத்துகிறார். சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகளையும், யதார்த்தமான உண்மைச் சம்பவங்களையும் மட்டுமே தன்னுடைய சிறுகதைகளின் கருப்பொருளாகக் கொண்டு கதைகளைப் படைத்துள்ளார். பவானி சிவகுமாரன் பெரும்பான்மையான எழுத்தாளர்கள் கையாண்ட காதல், பெண்ணியம் போன்ற கருப்பொருட்களைக் கையாள்வதைத் தவிர்த்து இன்றைய சமூகத்தினருக்குத் தேவையான விடயங்களை மட்டுமே தெரிந்தெடுத்து அதனையே தனது சிறுகதைகளிலே கையாளுகிறார். கதைகளிலிருந்து வெளிப்படும் மையக்கருத்துகளை நோக்கும் போது அவை இச்சமுதாயத்திலுள்ள உண்மைகளை வெளிப்படுத்துகின்ற அனுபவங்களாகின்றன. சிறுகதைகளில் உலவவிடப்பட்டுள்ள கதைமாந்தர்கள் உயிரோட்டம் மிக்கவர்களாகவும், சிறந்த பிரதிநிதிகளாயும் உளர்.

**அடிக்குறிப்பு**

1. மங்கையர்க்கரசி, சீ. கி.ரா.வின் சிறுகதைப் படைப்பாளுமை, ப. 45. சென்னை: காவ்யா (2003)
2. ஜெயராசா, சபா. “முன்வாயில் உரை” நிஜங்களின் தரிசனம், பக். 5, 6. தெகிவளை: மீரா பதிப்பகம். (2011)
3. பவானி, சி. ப. 59. நிஜங்களின் தரிசனம், தெகிவளை: மீரா பதிப்பகம். (2011)
4. மேலது. ப. 63.
5. மேலது. ப. 52.
6. மேலது. ப. 79.
7. மேலது. ப. 79.
8. மேலது. ப. 85.
9. மேலது. ப. 122.
10. மேலது. ப. 122.
11. மேலது. ப. 108.
12. மேலது. ப. 111.
13. மேலது. ப. 111.
14. மேலது. ப. 71.
15. மேலது. ப. 75.
16. மேலது. ப. 99.
17. மேலது. ப. 135.
18. மேலது. ப. 98.
19. மேலது. ப. 41.
20. மேலது. ப. 111.